1994 ஏப்ரல் 27]

அதில் முதலில் 75 விழுக்காடு தொகை அளிக்கப்படுவதற்கும், திட்டமிட்டபடி பணி நிறைவேற்றப்படுமானால், மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அவர்கள் பார்வையிட்டு, நிறைவுச் சான்று வழங்கிய பின்னர் இரண்டாவது தவணை வழங்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பைப் பெறுவதற்கு இந்தக் கல்லூரி முயற்சிக்கலாம். இப்படிப்பட்ட முன்மொழிவு பெறப்படுமேயானால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் விதிமுறைகளின்படி இதைப் பரிசீலிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 416, திரு கா. பூ. முனுசாமி, இருக்கையில் இருக்கிறாரா? (குறுக்கீடு) மொட்டை அடித்துக்கொண்டு வந்து இருக்கிறீர்கள், அதனால் தெரியவில்லை. திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

416—

தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைத்தல்.

***24865**—திரு. கா. பூ. முனுசாமி:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய நகரங்களில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய நகரங்களில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இந்த 3 நகரங்களும் வளர்ந்து கொண்டு வருகின்ற நகரங்கள். குறிப்பாக ஓசூர் நகரம் தொழிற்சாலைகளை உள்ளடக்கிய நகரமாக இருக்கின்ற காரணத்தினால், பல மாநிலங்களில் இருந்து மக்கள் வந்து அங்கே தொழிற்சாலைகளில் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, அங்கே கூட்டுறவு சிறப்பு அங்காடியைத் திறந்து வைத்தால், நியாயமான விலையில் பொருட்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாகப்

பெருகும். எனவே, இதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியளித்து கூட்டுறவுப் பண்டகசாலைகளை உருவாக்குவதற்கு சில சட்ட திட்ட விதிமுறைகள் இருக்கின்றன. சூப்பர் மார்க்கெட் ஒரு இடத்தில் தொடங்க வேண்டுமென்று சொன்னால், அங்கேயிருக்கிற மக்கள் தொகை, அந்த சூப்பர் மார்க்கெட் மூலமாக மாதத்திற்கு எதிர் பார்க்கக்கூடிய விற்பனை, அதற்குத் தேவையான மூலதனம் ஆகியவற்றை எல்லாம் பொறுத்து நிதியுதவி அளிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மேலும் இந்த நிதியுதவி அளிக்கிற அந்த நிலை இதுவரையில் மத்திய அரசிடம் இருந்தது. தற்போது தமிழகத்தின் உரிமைகளை எல்லாம் அவ்வப்போது தட்டிக் கேட்கிற நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 1-4-1992 முதல் மத்திய அரசிடம் இருந்த அந்த 'பேட்டர்ன்' நிதியுதவி — அளிக்கிற அந்த நிலைமையை தமிழக அரசு பெற்றிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் சூப்பர் மார்க்கெட் அமைக்க வேண்டுமென்றால், அங்கேயிருந்து கோரிக்கைகள் வருமானால், அதை இந்த அரசு கவனித்து, அந்த இடங்களில் எல்லாம் சூப்பர் மார்க்கெட்டை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய சீரிய சிந்தனையால் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில் மத்திய அரசிடம் போராடி இந்த நிலைமையைப் பெற்றிருக்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தத்து எடுத்துக்கொண்ட மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தில், குறிப்பாக ஓசூர் நகரத்திற்கு இந்த கூட்டுறவு சிறப்பு அங்காடியைக் கொண்டு வர அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல அங்கேயிருக்கிற தேவைகளைப் பொறுத்து, மக்கள் கேட்கிற அந்தக் கோரிக்கையைப் பொறுத்து இந்த அரசு நிச்சயமாகக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.